

கடலூர் மேற்கு மாவட்ட கழகம் சார்பில் "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி", பயிற்சி பாசறை கூட்டம் சபா .இராஜேந்திரன் எம்.எல்.ஏ, தலைமையில், நெய்வேலி தொ.மு.ச,அலுவலகத்தில் நடைபெற்றது,. அமைச்சர் சி.வி .கணேசன் சிறப்புரை ஆற்றினார். தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் வி .கே. வெங்கட்ராமன், பாவாடை கோவிந்தசாமி, துணைச் செயலாளர்கள் ஆர் .எஸ் .எம். தணிகை செல்வம், ஆனந்தி சரவணன், தொகுதி பார்வையாளர்கள் சுபா .சந்திரசேகர், பா .துரைசாமி , செ.புஷ்பராஜ், குலோத்துங்கன், முன்னாள் எம்.எல்.,ஏ கலைச்செல்வன், பொருளாளர் ஜி .தண்டபாணி உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய,நகர, பேரூர், கழக நிர்வாகிகள்,சார்பு அணி நிர்வாகிகள்,வாக்குச்சாவடி முகவர்கள் கலந்துகொண்டனர்.



இராணிப்பேட்டை மாவட்டம் தாஜ்புராவில் இருந்து வேப்பூர் வரை செல்லும் வெளிவட்டச் சாலை விரிவாக்கப் பணிகளை கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி. நேரில் சென்று ஆய்வு செய்தார்.
இதில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் ஜெ.எல்..ஈஸ்வரப்பன், நகர செயலாளர் ஏ.வி.சரவணன் மற்றும் ஒப்பந்ததாரர் கழகத்தினர் உடனிருந்தனர்.

### ஒன்றிய அரசின் ஒத்துழைப்பு இல்லாத நிலையிலும்

# தமிழ்நாட்டில் 16 சதவீத பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டுள்ளது!

### புதுச்சேரியில் அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா பெருமிதம்!



*புதுச்சேரி, டிச.17-*

ஒன்றிய அரசின் ஒத்துழைப்பு இல்லாத நிலையிலும் தமிழகத்தில் மகத்தான ஆட்சி நடைபெற்று மாநிலத்தில் 16 சதவீத பொருளாதார வளர்ச்சி அடைந்துள்ளதாக தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பெருமிதம் தெரிவித்துள்ளார்.

மேலும் தமிழக அரசு பற்றி அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி விரக்தியின் உச்சத்தில் பேசுவதாக கழக கொள்கை பரப்பு செயலாளர் ஜெகத்ரட்சகன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

2026 சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில் புதுச்சேரி மாநில தி.மு.க.வின் வாக்குச்சாவடி முகவர்கள் கூட்டம் கம்பன் கலையரங்கத்தில் நடைபெற்றது.

தி.மு.க. மாநில அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், புதுச்சேரி மாநில தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் எஸ். ஜெகத்ரட்சகன் எம்.பி, தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி ராஜா ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்டு வாக்குச்சாவடி முகவர்கள் மற்றும் நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தினார்கள். தொடர்ந்து புதுச்சேரி மாவட்டத்தில் உள்ள 23 தொகுதிகளை சேர்ந்த தொகுதி செயலாளர்கள் மற்றும் தி.மு.க. வாக்குச்சாவடி முகவர்கள் 800 பேருக்கு உடன்பிறப்பே வா எனும் பிரத்தியேக செயலியும் அறிமுகப்படுத்தப் பட்டு அதை எவ்வாறு பயன்படுத்துவது என பயிற்சி அளிக்கப்பட்டது.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி ராஜா, புதுச்சேரியில் தி.மு.க.விற்கு அமோக ஆதரவு உள்ளது. மக்கள் எழுச்சியுடன் உள்ளார்கள். மக்கள் எதிர்பார்த்த திராவிட மாடல் ஆட்சி அமையும். அப்பொழுது கண்டிப்பாக விமான நிலையம் விரிவாக்கம் செய்யப்படும் என்றார். தொடர்ந்து தமிழகத்தில் உலகமே ஏற்கக் கூடிய அளவிற்கு திராவிட மாடல் ஆட்சி சிறப்பாக நடைபெற்று வருகிறது. தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறமையான நிர்வாகத்தால் ஆட்சியை வழி நடத்தி வருகிறார்.

2011ம் ஆண்டு கலைஞர் ஆட்சிக் காலத்தில் 13 சதவீத விழுக்காடு இருந்த பொருளாதார வளர்ச்சி, கொரோனா பேரிடரையும் தாண்டி, ஒன்றிய அரசின் ஒத்துழைப்பு இல்லாத நிலையிலும் மகத்தான ஆட்சி நடைபெற்று இன்று 16 சதவீத பொருளாதார வளர்ச்சி அடைந்துள்ளது என்று பெருமிதமாக தெரிவித்த அவர், அதற்கான ஆதாரங்களை ஒன்றிய அரசே வழங்கி உள்ளது என்றார். மேலும் பேசிய அவர், திராவிட மாடல் நாயகனின் ஆட்சி புதுச்சேரியிலும் மலர வேண்டும் என்பது எங்களுடைய கருத்து மட்டுமல்ல, ஒட்டுமொத்த மக்கள் மற்றும் பெண்களுடைய விருப்பமும் அதுதான் என்று குறிப்பிட்ட டி.ஆர்.பி ராஜா, புதுச்சேரியில் ஆக்கப்பூர்வமான ஆரோக்கியமான வளர்ச்சி சார்ந்த அரசு வரவேண்டும் என்பதுதான் தி.மு.க.வின் எண்ணம் என்று குறிப்பிட்டார்.

தமிழகத்தில் 10 ஆண்டு காலம் எந்த ஒரு வளர்ச்சியும் கிடையாது. அதையும் மீறி தற்போது தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக வளர்ந்து வருகிறது.

புதுமைப்பெண் திட்டம், தமிழ்ப் புதல்வன், விடியல் பயணம் போன்ற திட்டங்கள் புதுச்சேரியிலும் வர வேண்டும் என்று மக்கள் விரும்புகிறார்கள்.

சுற்றுலா மேம்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது. புதுச்சேரியில் என்னென்ன தொழில்கள் செய்தால் மாநிலத்தை வளர்ச்சி பாதையில் கொண்டு செல்ல முடியுமோ அதற்கு ஏற்றது போல் தொழில் வளர்ச்சி உருவாக்கப்படும். தமிழ்நாடு வளர்ச்சியை புதுச்சேரியிலும் கொண்டு வர வேண்டும் என்பதுதான் திராவிட மாடலின் எண்ணமாக உள்ளது. எந்த ஆட்சியாக இருந்தாலும் நம்பர் ஒன் ஆட்சி திராவிட மாடல் ஆட்சி தான் என்று உறுதிபட தெரிவித்த அவர், எந்த ஆட்சியை கொண்டு வர வேண்டும் என்று மக்கள் முடிவு செய்து இருக்கிறார்கள், புதுச்சேரியிலும் திராவிட மாடல் ஆட்சி மலரும் என்றார்.

முன்னதாக பேசிய புதுச்சேரி மாநில ஒருங்கிணைப்பாளர் ஜெகத்ரட்சகன் எம்பி, தமிழக அரசு பற்றி அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பேசுவது விரக்தியின் உச்சத்தில் பேசுகிறார் அதற்கெல்லாம் பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை என்று குறிப்பிட்ட அவர், புதுச்சேரியிலும் நூற்றுக்கு 200 சதவீதம் திராவிட மாடல் ஆட்சி அமையும் என்று அவர் தெரிவித்தார். மேலும் புதுச்சேரியில் யார் தலைமையில் ஆட்சி அமையும் என்பதை தி.மு.க. தலைமைதான் முடிவு செய்யும் என்றார்.

<u>தமிழ்நாட்டில்</u>

# மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுவதில் தாமதம் ஏன்?

### மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி



*புதுடெல்லி, டிச.17-*

தமிழ்நாட்டில் மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுமானப் பணிகள் நிறைவு செய்வதில் அசாதாரண கால தாமதம் ஏன்? மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

இது தொடர்பாக அவரது கேள்விகள் வருமாறு:-

தமிழ்நாட்டில் மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுமானத்தில் அசாதாரண காலதாமதம் உள்ளது ஏன்? எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுமானத்தின் தற்போதைய நிலை மற்றும் அதை விரைவாக முடிக்க ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய விவரங்கள் தருக?

ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் (JICA) மற்றும் ஒன்றிய அரசு வழங்கிய நிதியின் அளவு மற்றும் JICA யிடமிருந்து நிதி பெறுவதில் தாமதத்திற்கான காரணங்கள் யாவை?

மதுரை AIIMS மருந்துவமனை கட்டுமானத்திற்காக இதுவரை செலவிடப்பட்ட நிதியின் அளவு மற்றும் எய்ம்ஸ் மருத்துவமனை கட்டும் பணி நிறைவடைய ஆகும் உத்தேசமான நேரம் என்ன? என மக்களவையில் டி. எம்.கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

அதற்கு ஒன்றிய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் ராஜாங்க அமைச்சர் பிரதாப்ராவ் ஜாதவ் எழுத்துப் பூர்வமாக கூறிய பதில் வருமாறு:

பிரதான் மந்திரி ஸ்வஸ்த்ய சுரக்ஷா யோஜனா (PMSSY) கீழ், மதுரையில் உள்ள அகில இந்திய மருத்துவ அறிவியல் நிறுவனம் (AIIMS) மருத்துவமனை ரூ. 2021.51 கோடி செலவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. 30.11.2025 நில வரப்படி இந்த கட்டுமானப் பணிகளின் முன்னேற்றம் 42% ஆகும். இன்றுவரை, மதுரை எய்ம்ஸ் கட்டுமானத்திற்காக ஒன்றிய அரசு இதுகாறும் ரூ. 421.02 கோடியை விடுவித்துள்ளது.

இந்தத் திட்டத்திற்கு ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் (JICA) மூலம் கூடுதல் பட்ஜெட் வளங்கள் (EBR) கீழ் நிதியளிக்கப்படுகிறது, இதன் மூலம் ஜப்பானிய யென் 22,788,000,000 மட்டுமே கடன் வழங்கப்படுகிறது.

மார்ச் 2021 இல் ஜப்பான் அரசாங்கத்திற்கும் இந்திய அரசாங்கத்திற்கும் இடையே கையெழுத்திடப்பட்ட கடன் ஒப்பந்தத்தின்படி, திட்டத்தை முடிக்க உத்தேச இலக்கு தேதி அக்டோபர் 2026 ஆகும்.

திட்டத்தின் முன்னேற்றம் மற்றும் நிதி வெளியீடு நிறுவனம் மற்றும் அமைச்சக மட்டத்தில் தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறது. இந்தத் திட்டத்தைக் கண்காணித்து சுமூகமாக செயல்படுத்துவதற்கு வசதி செய்வதற்காக தமிழ்நாடு அரசின் முதன்மைச் செயலாளர் (சுகாதாரம்) தலைமையில் ஒரு வழிகாட்டுதல் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறினார்.

## தொ.மு.ச. பேரவை அறிவிப்பு!

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் "தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக (வேலூர்) தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின்" (பதிவு எண் 820/NAT, பேரவை இணைப்பு எண். 405) பணிமனைகள் மற்றும் மத்திய சங்க நிர்வாகிகள் தேர்தலை நடத்திட பேரவைச் செயலாளர் சோம.அழகிரி அவர்கள் தேர்தல் ஆணையாளராக நியமனம் செய்யப்பட்டு ஏற்கெனவே பேரவையால் அறிவிப்பு செய்யப்பட்டது. அதன்படி தேர்தல் ஆணையாளரால் வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டு கீழ்க்கண்ட தேர்தல் அட்டவணை, விதிமுறைகளின்படி தேர்தல் நடைபெறும் என அறிவிக்கப்படுகிறது.

**தேர்தல் கால அட்டவணை**

**பணிமனை நிர்வாகிகள் தேர்தல்**

வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் (பணிமனைகள் தோறும்) - 17.12.2025 காலை 11.30 மணி

இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் (பணிமனைகள் தோறும்) - 20.12.2025 காலை 11.00 மணி

வேட்பு மனு படிவம் வழங்குதல் - 20.12.2025 மதியம் 2.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை

வேட்பு மனு தாக்கல் - 21.12.2025 காலை 9.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரை

வேட்புமனு பரிசீலனை - 21.12.2025 மதியம் 2.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை

தகுதியான வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல் - 21.12.2025 மாலை 6.00 மணி

வேட்பு மனு திரும்பப் பெறுதல் - 22.12.2025 காலை 12.00 மணி வரை

இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல் - 22.12.2025 மாலை 4.00 மணி

போட்டியிருப்பின் வாக்குப் பதிவு (பணிமனைகள் தோறும்) - 27.12.2025 காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை

**மத்திய சங்க நிர்வாகிகள் தேர்தல்**

வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் (பணிமனை களில் வெற்றி பெற்றவர்கள்) - 29.12.2025 காலை 9.00 மணி

வேட்பு மனு படிவம் வழங்குதல் - 29.12.2025 காலை 9.30 மணி

வேட்பு மனுத்தாக்கல் - 29.12.2025 காலை 11.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை

வேட்பு மனு பரிசீலனை - 29.12.2025 மதியம் 2.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை

தகுதியுள்ள வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல் - 29.12.2025 மாலை 3.30 மணி

வேட்பு மனு திரும்பப் பெறுதல் - 29.12.2025 மாலை 4.00 மணி முதல் மாலை 4.30 மணி வரை

இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல் - 29.12.2025 மாலை 5.00 மணி

போட்டியிருப்பின் வாக்குப் பதிவு - 30.12.2025 காலை 9.00 மணி முதல் காலை 11.00 மணி வரை

வாக்குப் பதிவு முடிந்தவுடன் வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும்.

குறிப்பு:-

1) பணிமனை தேர்தலுக்கு உரிய வேட்பு மனு படிவம் வழங்குதல், வேட்பு மனு தாக்கல், மனு பரிசீலனை, இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல் வேலூர் மத்திய சங்க அலுவலகத்தில் நடைபெறும். வாக்குப் பதிவு மற்றும் வாக்கு எண்ணிக்கை முடிவுகள் அறிவித்தல் அந்தந்த பணிமனைகளில் ஒதுக்கப்படும் இடத்தில் நடைபெறும்.

2) மத்திய சங்க நிர்வாகிகள் தேர்தல் தொடர்பான அனைத்து நடைமுறைகளும் வேலூர் மத்திய சங்க அலுவலகத்தில் நடைபெறும்.

**மு.சண்முகம்**
பொதுச்செயலாளர்,
தொ.மு.ச. பேரவை

15.12.2025
இடம்: கலைஞரகம்


## D.T.P. ஆப்பரேட்டர்கள் -- போட்டோஷாப் மற்றும் பிழை திருத்துனர்கள் தேவை !

முரசொலி கணினிப் பிரிவில் பணிபுரிய 'போட்டோஷாப்' **(LAYOUT)** பணியில் நன்கு தேர்ச்சி பெற்ற **D.T.P.** ஆப்பரேட்டர்கள் மற்றும் முன் அனுபவம் மிக்க பிழை திருத்துநர்கள் **(PROOF READERS)** பகல் மற்றும் இரவுப் பணிகளுக்கு (ஆண்கள், பெண்கள்) தேவை. தகுந்த சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

**நேரில் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :–**
**பொது மேலாளர்**
**'முரசொலி' – நாளிதழ்**
**180, கோடம்பாக்கம் நெடுஞ்சாலை,**
**சென்னை – 600 034.**




தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தின் 11வது கூட்டம் தமிழ்நாடு மீனவர் நல வாரிய தலைவர். முனைவர் அ.ஜோசப் ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (15.12.2025) சென்னை, மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை இயக்குநர் அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கால்நடை பராமரிப்பு. பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை செயலாளர் டாக்டர்.என்.சுப்பையன், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை இயக்குநர் க.வீ.முரளிதரன், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் இவ்வாரிய உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். இக்கூட்டத்தில், தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தில் உறுப்பினர் பதிவினை அதிகரித்திடவும். நலத்திட்டங்கள் குறித்து மீனவர்கள் மற்றும் தொழிலாளர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்திடவும் மாநிலம் முழுவதும் 100 முகாம்கள் நடத்தப்பட வேண்டும் என தலைவர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.



இராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்சா முத்துராமலிங்கம் நேற்று இராமநாதபுரம் திரு உத்திர கோசமங்கை ஆலங்குளம் எக்கதுடி,வழித்தடத்தில் புதிய பேருந்தை துவக்கி வைத்தார். உடன் நகர் மன்ற தலைவர் ஆர்.கே.கார்மேகம், துணைத் தலைவர் பிரவீன் தங்கம் மற்றும் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.